SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Ordinary Level

# தமிழ்

**1157/1**

தாள் 1

**TAMIL**

Paper 1

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

**2 hours**

Additional Materials: Answer Booklet L

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

4 அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அகராதிகளுள் ஒன்றினைப் பயன்படுத்தலாம்.



Singapore Examinations and Assessment Board

©MOE

'அ' பிரிவில் ஒரு வினாவுக்கும் 'ஆ' பிரிவில் ஒரு வினாவுக்குமாக மொத்தம் <u>இரண்டு</u> வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## 'அ' பிரிவு (மின்னஞ்சல்)

**பின்வருவனவற்றுள் ஏதேனும் <u>ஒன்றுக்கு</u> மட்டும் 110 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதவும்.** (20 மதிப்பெண்கள்)

**1** பின்வரும் உனது நண்பரின் மின்னஞ்சலைக் கவனமாகப் படித்து அதற்குப் பதில் எழுதவும்.

File Edit View Mail Data Source Help

| | |
|---|---|
| அனுப்புநர்: | mugilan@kgoomail.com |
| பெறுநர்: | kathiravan@kgoomail.com |
| நாள்: | 27/05/2024 |
| பொருள்: | ஆலோசனை தேவை |

வணக்கம் கதிரவன்,

என் தங்கை கலா உயர்நிலை ஒன்றில் படிக்கிறாள். தொடக்கப்பள்ளியில் அவள் நடனத்தை இணைப்பாட நடவடிக்கையாகத் தேர்ந்தெடுத்து அதில் சிறந்து விளங்கினாள். உயர்நிலைப்பள்ளியிலும் நடனத்தையே இணைப்பாட நடவடிக்கையாகத் தேர்ந்தெடுக்குமாறு என் பெற்றோர் கூறினர். அதனால், கலா நடனத்தைத் தன் இணைப்பாட நடவடிக்கையாகத் தேர்ந்தெடுத்து அதில் ஈடுபட்டு வருகிறாள். ஆனால், இப்போது அவள் நடனத்திற்குப் பதிலாக விளையாட்டுத் தொடர்பான மற்றோர் இணைப்பாட நடவடிக்கையை மேற்கொள்ள விரும்புகிறாள். என் பெற்றோருக்கு இதில் விருப்பமில்லை. விளையாட்டில் ஈடுபடும்போது அவளுக்குக் காயம் ஏற்படலாம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

நீ விளையாட்டுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறாய் என்பதை நான் அறிவேன். என் பெற்றோரின் அச்சத்தைப் போக்குவதற்கு நான் என்ன செய்யலாம்? மேலும், வேறோர் இணைப்பாட நடவடிக்கையை மேற்கொள்ள விரும்பும் கலாவின் முடிவு குறித்து அவளுக்கு நான் என்ன ஆலோசனைகள் கூறலாம்? உன் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

மிக்க நன்றி.

முகிலன்

**2** பின்வரும் தகவலைப் படித்து அதற்கு மின்னஞ்சல்வழியே பதில் எழுதவும்.

தேர்வுகள் முடிவடைந்ததும் நிகழ்ச்சி ஒன்றுக்கு உன் பள்ளி ஏற்பாடு செய்திருந்தது. அந்நிகழ்ச்சியில் ஆரோக்கிய வாழ்க்கைமுறை குறித்து உரையாற்றுவதற்குப் பேச்சாளர் ஒருவரை உன் பள்ளி அழைத்திருந்தது. அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவர்கள் பலரும் தாம் அவ்வுரையைக் கேட்டதால் மிகவும் பயனடைந்ததாகக் கூறினர்.

அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவர்களுள் ஒருவராக உன்னைக் கற்பனை செய்துகொள்ளவும். அந்நிகழ்ச்சி மாணவர்களைக் கவர்ந்ததற்குரிய காரணங்களைக் குறிப்பிட்டு அதன் பொறுப்பாசிரியருக்கு நீ ஒரு மின்னஞ்சல் எழுதவும். மேலும், எதிர்காலத்தில் தேர்வுகளுக்குப் பிறகு எத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டால் மாணவர்கள் பயனடைவர் என்பது குறித்தும் உனது ஆலோசனைகளை விளக்கி எழுதவும்.

## ‘ஆ’ பிரிவு (கட்டுரை)

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் <u>ஒன்றுக்கு</u> மட்டும் 200 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதவும்.** (40 மதிப்பெண்கள்)

**3** உன் நடத்தையில் உனக்கு எப்போதுமே மனநிறைவு உண்டு. ஆனால், ஒரு சம்பவத்தினால் நீ நடந்துகொள்ளும் விதத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அச்சம்பவத்தை விவரித்தும் நீ நடந்துகொள்ளும் விதத்தை மாற்றிக்கொண்டதால் ஏற்பட்ட விளைவுகளை விளக்கியும் எழுதவும்.

**4** எந்தவொரு திட்டமும் இல்லாமல் குறிக்கோளை அடைய நினைப்பது பயனற்றது. இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்?

**5** அன்பினால் எதையும் சாதிக்க முடியும் என்பதை உணர்த்தும் ஒரு கதையை எழுதவும்.

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.